பக்கங்கள்:08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 11 சனிக்கிழமை 27.09.2025 கதிர் 321

## இது ரகசியம் அல்ல!

உலகப் பெருந் தொற்றான கொரோனா கொவிட்ட 19 மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை மக்கள் வறுமை நோக்கித் தள்ளப்பட்டனர், ☞2

## எதிர்க் கட்சித் தலைவர் மீது குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்கிறது ஐக்கிய ம. சக்தி

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பானதகவல்களைசமர்ப்பிக்கவில்லை எனத்தெரிவித்துஜமுனிகமல்துஷாராஎன்ற நபரால் வியாழனன்று இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. அவரால் முன்வைக்கப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும்ஆதாரமற்றது எனஐக்கியமக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலக ஊடகப்பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான தகவல்கள் செயலகத்தால் பெறப்பட்டதாகக் கூறும் நாடாளுமன்றச்செயலாளர்நாயகம்குஷானி ரோஹனதீரவின் கையொப்பத்துடன் 2025.04.23 திகதியிடப்பட்ட கடிதம் சஜித் பிரேமதாசவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக நாம் முன்னரே ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியிருந்தோம்.

சஜித் பிரேமதாசவால் உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும்பொறுப்புகள்தொடர்பானதகவல்கள் டிஜிட்டல் வடிவத்தில் மீண்டும் தாக்கல் செய்யப்பட்டு கடந்த புதன்கிழமை ☞2

## தையிட்டி விகாரை பிரச்சினைக்கு உடன் தீர்வு சாத்தியமில்லையாம்

### கைவிரித்தது ஆளும்தரப்பு

யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரை பதிவு செய்யப்படவில்லை. காணியும் ஆளும்தரப்பால் சுவீகரிக்கப்படவில்லை. காணி குறித்து வெளிப்படைத்தன்மையுடன் ஆராயப்படுகிறது. தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு உண்மைநோக்கத்துடன் தீர்வு காண்பதற்கு எடுத்த நடவடிக்கைகளை ஆராயவேண்டும். இந்த பிரச்சினைக்கு உடன் தீர்வு காணும் தன்மை கிடையாது. நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் தலையீட்டின் ஊடாக தையிட்டி திஸ்ஸ பிரச்சினைக்குத் தீர்வு காண எதிர்பார்த்துள்ளோம் என புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள், கலை கலாசாரங்கள் அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது இலங்கைத் தமிழ் அரசுக் ☞2

## பொருளாதார நெருக்கடிக்கு முன்னைய நிலைக்கு அடுத்த ஆண்டு திரும்பலாம்

### அமெரிக்காவில் அரசுத் தலைவர் அநுர தெரிவிப்பு

**இலங்கை பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு முன்பு 2019இல்இருந்தநிலைக்குஅடுத்த ஆண்டு திரும்பக்கூடிய வாய்ப்பு உள்ளதாக 2022 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக வங்குரோத்து நாடாக மாறிய இலங்கை அந்த நெருக்கடியை விரைவாக தீர்த்து வைத்தநாடாகமாறியுள்ளதுஎன்று அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.**

**ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்து கொண்ட அரசுத்தலைவர், அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களை நியூயோர்க்கில் சந்தித்த போது இதனைத் தெரிவித்தார்.**

**2024 அரசுத்தலைவர்த்தேர்தல் வெற்றிக்குபுலம்பெயர்சமூகத்தினர் அளித்த பங்களிப்புக்கு நன்றி தெரிவித்த அவர், இலங்கையின் அரசியல் வரலாற்றில் 3 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்ற ஒரு இயக்கம் இன்று பெற்றிருக்கும் வெற்றியும், அதைத்தொடர்ந்து** ☞2

## பிரதமர் அடுத்த மாதம் சீனாவிற்குப் பயணம்

பிரதமர் ஹரணி உத்தியோகபூர்வ பயணமாக ஒக்டோபரில் சீனா செல்லவுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் பிரதமர் இவ்பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

சீனமக்கள்குடியரசுநிறுவப்பட்டு76ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இலங்கையிலுள்ள சீன தூதரகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு நேற்று ☞3

## இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு முற்றிலும் அரசியல்மயப்படுத்தப்பட்டது

### நளின் பண்டார எம்.பி. குற்றச்சாட்டு

ஜேவிபியின்சட்டபிரிவின்உறுப்பினர்இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது தொடர்பில் ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்ன ? இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முழுமையாக அரசியல்மயப்படுத்தப்பட்டு ஆளும்தரப்பின் அடக்குமுறையை செயற்படுத்துகிறதென ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கோப் குழு அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

கோப் குழு கடந்த காலத்தை போன்று நிகழ்கால நடவடிக்கைகள் மற்றும் முறைகேடுகளையும் ஆராய வேண்டும். பிள்ளையானின் உதவியாளர் பாசிக்குடா பகுதியில் 250 ஏக்கர் அரசகாணியை முறையற்றவகையில்பெற்றுக்கொண்டுள்ளார். இந்த காணியை மீளப்பெறுமா று காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குஅறிவுறுத்தப்பட்டுள்ளநிலையில் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் ☞2

## காங்கேசன் துறைமுக அபிவிருத்தி சாத்தியமில்லாமல் போனமை ஏன்?

### அருச்சுனா எம்.பி. நாடாளுமன்றில் கேள்வி

காங்கேசன் துறைமுகத்தை அபிவிருத்தி செய்து சர்வதேச துறைமுகமாக மாற்ற முடியாது என்ற முடிவுக்கு வந்ததற்கு காரணம் என்ன, பலாலி வானூர்தி நிலைய அபிவிருத்தி தவிர்ந்த பிறிதொரு காரணங்களுக்காகவானூர்திநிலையம் என்ற போர்வையில் மக்களின் காணிகளுக்கான இழப்பீடுகள் வழங்கப்படாமல் இராணுவ ஆக்கிரமிப்பால் அபகரிக்கப்படுகிறது என்ற கூற்றை ஏற்றுக்கொள்கிறீர்களா என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா நெடுஞ்சாலைகள் போக்குவரத்து, அபிவிருத்தி, துறைமுகம் மற்றும் வானூர்தி சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது நிலையியற் கட்டளை 27/ ☞3

## பைத்தியக்காரர்களுக்குப் பதிலளிக்கமாட்டேன் சபை முதல்வர் பிமல் எடுத்தெறிந்து தெரிவிப்பு

### அருச்சுனா எம்.பியின் கேள்விக்கு இப்படிப் பதில்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைக்கும் கேள்விகளுக்கு நான் பதிலளிப்பேன். ஆனால் பைத்தியக்காரர்களின்கேள்விகளுக்கு பதிலளிக்கமாட்டேன் என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க, யாழ். மாவட்ட சுயேச்சைக்குழு நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்க ☞2

## காங்கேசன் துறைமுகம் அபிவிருத்தி; இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவிப்பு

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இந்திய ஆளும் தரப்பின் நிதி ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இறுதி தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை. துறைமுகத்துக்கான எதிர்கால கேள்வி மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு ஆகியவற்றை ☞3

### சமூக வலைத்தளங்களில்

## வெறுப்புப் பேச்சு, இன முறுகல் தூண்டல் தொடர்பில் ஆளும்தரப்பு விசேட கவனம்

### அமைச்சர் விஜேபால அறிவிப்பு

சமூக வலைத்தளங்களில் வெறுப்புப் பேச்சுக்கள், இன முறுகளை தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுதல் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன. நிகழ்நிலை காப்புச் சட்டம் கணிசமான அளவில் திருத்தம் செய்யப்பட்டு, சமூக வலைத்தளங்கள் முறையான வழிமுறையுடன் கண்காணிக்கப்பட வேண்டும். வெகுவிரைவில் இந்த சட்டம் திருத்தம் செய்யப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான கேள்வி வேளையின் போது ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞3

## இனி இது .....

உணவுப் பஞ்சம் ஏற்பட்டது என்றாலும் வருடாந்தம் 1.44 மில்லியன் தொன் உணவை இலங்கையர்களாகிய நாம் வீணாக்குகின்றோம் என்கிற தகவல் ஆச்சரியப்படுத்துகின்றது.

இலங்கையர்களில் சுமார் கால்வாசிப் பேரால் முழுமையாக மூன்று நேர உணவை உண்ண முடியாத நிலையிலும் நாளாந்தம் சுமார் 4 தொன் உணவு வீணடிக்கப்படுகின்றது என்பது மிக மிக் கவனத்திலெடுக்கப்படவேண்டியதாகின்றது. உணவை வீணடிப்பதில் உணவகங்களுக்குப் பெரும் பங்கு உண்டு. குறிப்பாக சோறு கறிகளை விநியோகிக்கும் சிறு உணவகங்கள் ஒருவருக்குத் தேவையான அளவிற்கும் அதிகமாக சோற்றை அள்ளி நிரப்பி 'பார்சல்' கட்டுவதை முதலில் நிறுத்தவேண்டும்.

உலக மக்கள் தொகை ஆண்டுதோறும் 1.3 பில்லியன் தொன் உணவை வீணாக்குகிறது என்று இலங்கை மற்றும் மாலத்தீவுகளுக்கான ஐ.நா. உணவு மற்றும் வேளாண் அமைப்பின் பிரதிநிதி விமலேந்திர சரண் சமீபத்தில் தெரிவித்தார்.

வீணாக்கப்படும் இந்த 1.3 பில்லியன் தொன் உணவு 3 பில்லியன் மக்களுக்கு உணவளிக்க உதவும் என்று சரண் கூறினார்.

இலங்கையில் உணவு வீணாக்கம் குறித்து ஐ.நா. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு நடத்திய சமீபத்திய ஆய்வில், இலங்கை ஒரு நாளைக்கு 3,963 தொன் உணவு வீணாக்கத்தை உருவாக்குகிறது என்றும் அவர் கூறினார். அதன்படி, ஆண்டுக்கு உருவாகும் உணவு வீணாக்கத்தின் அளவு 1.44 மில்லியன் தொன்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் நகராட்சிக் கழிவுகளில் 50 முதல் 76 சதவீதம் வரை வீணடிக்கப்படும் உணவுகளே என்று அவர் கூறினார். இதில் 38 சதவீதம் வீட்டு உணவு கழிவுகள் என்றும், மற்றொரு 24 சதவீதம் உணவகங்கள் மூலமாக உருவாகிறது என்றும் அவர் கூறினார். மேலும் 16 சதவீதம் சந்தைகளாலும், 12 சதவீதம் இறைச்சிக் கடைக்காரர்களாலும் உருவாக்கப்படுகிறது என்றும் அவர் கூறினார். மேல் மாகாணத்தில் அதிக உணவு வீணாக்கப்படுவதாகவும், இது சதவீத அடிப்படையில் 60 சதவீதமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு ஆண்டும் 76 கிலோகிராம் உணவை வீணாக்குகின்றனராம். 2023ஆம் ஆண்டு முழுவதும் சேகரிக்கப்பட்ட தரவுகளிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு இலங்கையில் உணவு வீணாக்கப்படுவது குறித்த இந்த கணக்கெடுப்பை நடத்தியதாகவும் அவர் கூறினார்.

2030 ஆம் ஆண்டுக்குள் உலக மக்கள் தொகை 850 மில்லியனை நெருங்கும்போது உணவுத் தேவையும் அதனைப் பெறமுடியாது தவிப்போரின் எண்ணிக்கையும் கடுமையாக அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்.

செப்டெம்பர் 29 சர்வதேச உணவு வீணாக்கத்தைக் குறைப்பதற்கான தினம். இனிமேலாவது உணவை வீணடிக்காதிருக்கப் பழகுவோம். தட்டு நிறைய உணவைக் குவித்துவிட்டுப் பின்னர் அதனை வீணாக்குவதற்குப் பதில், அளவோடு உணவைப் பெற்று அவற்றை உண்டு முடிப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் நாடாளுமன்றத்தில் அதிக உறுப்பினர்களைக் கொண்டிருப்பதும் ஒரு சாதாரண முடிவு அல்ல என்று வலியுறுத்தினார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்ததே தமது முதன்மையான சவால் என்று குறிப்பிட்ட அரசுத் தலைவர், 2022/2023ஆம் ஆண்டுகளில் நாடு திவாலான நிலையில் இருந்து, ஓராண்டில் கணிசமான பொருளாதார ஸ்திரத்தன்மையை எட்டியுள்ளதாகக் குறிப்பிட்டார். பொருளாதாரத்தை மிகவேகமாக மீட்டெடுத்த நாடுகளில் ஒன்றாக இலங்கை சர்வதேச அளவில் அறிமுகப்படுத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகள் வருகை, வெளிநாட்டில் இருந்து நாட்டுக்கு வரும் டொலர்கள், மற்றும் ஒரு பில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீடுகள் ஆகியவை இந்த ஆண்டு வரலாற்றில் மிக உயர்ந்த வளர்ச்சியை எட்டியுள்ளன. 2028ஆம் ஆண்டுக்குள் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன்கொண்ட பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும், அத்துடன், முதல் முறையாக 2025ஆம் ஆண்டில் எதிர்பார்த்ததைவிட அதிக அரச வருவாயைப் பெற முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசுத் தலைவர் அவர்கள், பொருளாதார வெற்றிகள் சாதாரண மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்குடன் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுவதாகவும், செயல்திறனற்ற அரச கட்டமைப்பைச் சீர்திருத்துவதற்காக 70,000 பேரை புதிதாக அரச சேவையில் இணைக்கவும், இலங்கையின் வரலாற்றிலேயே உயர்ந்த சம்பள உயர்வை வழங்கவும் (2025-ல் மட்டும் 11,000 கோடி ரூபா) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். அத்துடன், அடுத்த ஆண்டுக்குள் அரச சேவையின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்படும் என்றும் அறிவித்தார். மேலும், சர்வதேச அரங்கில் இழந்த நற்பெயரை மீட்டு, வலுவான இராஜதந்திர உறவுகளைக் கட்டியெழுப்புவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சட்டத்தின் ஆட்சி தொடர்பில் பேசிய அவர், அதிகாரத்துக்கும் செல்வத்துக்கும் முன் வளைந்துகொடுக்கும் சட்டத்தை மாற்றி, இன்று இலங்கையில் சட்டத்தை அணுக முடியாத ஒரு நபரும் இல்லை என்பதை நடைமுறையில் நிரூபித்து வருவதாகத் தெரிவித்தார். மோசடி மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான மக்கள் ஆணையை நிறைவேற்றி வருவதாகவும், அரசியல்வாதிகளின் வீண் விரயங்களை கட்டுப்படுத்த சட்ட வரம்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பொதுமக்களின் பணத்தில் ஒரு சதமும் வீணாக்காத ஆளும்தரப்பு இன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். அத்துடன், மக்கள் மத்தியில் நீதியைக் கோரி நிற்கும் மிக முக்கியமான சம்பவமான உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த நீதிக்காக விசாரணைகள் தொடர்வதாகவும், சர்வதேச அளவில் நாட்டின் கறைபடிந்த பிம்பத்திற்குக் காரணமான கொலைகள் மற்றும் கடத்தல்கள் குறித்து நீதி வழங்கப்படுமென்றும் அவர் உறுதியளித்தார்.

படையினரின் பணிகள் குறித்து பாராட்டு இருந்தாலும், அதற்கு மறைமுகமாக செய்த குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துவதாகவும், குற்றங்கள் மற்றும் ஊழல்கள் தொடர்பான விசாரணைகளை ஒருபோதும் அரசியல் கோணத்தில் நடத்துவதில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மேலும், நாட்டில் மறைவான அரசுகளை நசுக்கி, போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒடுக்க கடுமையாக உழைத்து வருவதாகவும் கூறினார்.

இறுதியாக, பாதியில் நிறுத்தப்பட்ட கட்டுநாயக்க வானூர்தி நிலையத் திட்டம் போன்ற கட்டுமானப் பணிகளை மீண்டும் ஆரம்பித்துள்ளதாகவும், மக்களுக்குக் கிடைத்த ஆணையின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பாதையில் ஆளும்தரப்பு பயணிப்பதாகவும் தெரிவித்தார். இந்த மாற்றங்களுக்கு கால அவகாசம் மற்றும் புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்பு மிகவும் முக்கியம் என்று வலியுறுத்தி, முதலீட்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளவும், இலங்கையுடன் பல்வேறு வழிகளில் தொடர்பு கொள்ளவும் அவர் அழைப்பு விடுத்தார்.

## பைத்தியக்காரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுப்பு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில், நிலையியல் கட்டளை 27/2இன் கீழ் வடக்கில் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா கேள்விகளை எழுப்பியிருந்த நிலையில், அமைச்சர் அதற்குச் சரியான பதில்களை வழங்கவில்லை என்று அருச்சுனா எதிர்ப்பு தெரிவித்த நிலையில் அமைச்சர் சிரித்தவாறு இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க பதிலளித்த பின்னர் மேலதிக கேள்விகளை எழுப்பிய அருச்சுனா, சண்டியன் இல்லாத இடத்தில் நொண்டியனும் சண்டியன்தான். யாழ்ப்பாணம் என்பது என்பிபியின் வெற்றிலைப்பெட்டி அல்ல. நான் கேட்ட கேள்விகளில் ஒன்றுக்கேனும் பதில் வழங்கப்படவில்லை. வடக்கில் அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களின் காணிகள் பெறப்படுகின்றன. அங்கே மக்கள் காணிகளுக்காக சாகும்வரையில் பட்டினிப் போராட்டம் நடத்துகின்றனர்.

அபிவிருத்திக் குழு கூட்டங்களில் அபிவிருத்தி தொடர்பில் செய்த ஒரு வேலையைக் கூறுங்கள். கல் நடுவதாக ஆட்களை பேய்க் காட்டக்கூடாது. சும்மா ஆட்காட்டுதல், பேய்காட்டுதல் வேலையை யாழ்ப்பாணத்தில் வைக்கவேண்டாம். யாழ்ப்பாணம் உங்களின் வெற்றிலைப் பெட்டி இல்லை என்றார்.

இதன் பின்னர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க அதற்கு பதிலளிக்காமல் சபையின் தினப் பணிகளை முன்னெடுத்து அமைச்சின் அறிவித்தலொன்றை வாசிக்கத் தொடங்கினார். ஆனால் அருச்சுனா தொடர்ந்தும் 'பதில் கூறுங்கள்' என்று அமைச்சரை நோக்கி தெரிவித்துக்கொண்டே இருந்தார்.

இவ்வேளையின் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்கவும் ஏதோவொன்றை அமைச்சரை நோக்கி கூறினார். அதற்கு 'அந்த வாட்டுக்கே உங்களையும் அனுப்ப வேண்டிவரலாம்' என்று சுஜீவ சேனசிங்கவை நோக்கி அமைச்சர் பிமல் ரத்நாயக்க சிரித்தவாறு கூறினார்.

இதேவேளை அருச்சுனா தொடர்ந்தும் சபைக்குள் கூச்சலிட்டுக்கொண்டிருந்த நிலையில் அமைதியாக இருக்குமாறு சபாநாயகரும் தொடர்ந்தும் அவருக்கு எச்சரிக்கை விடுத்தார்.. ஆனால் அகுச்சுனா அமைதியடையாமல் அமைச்சரை பார்த்து ஏதோவொன்றை கூறிக்கொண்டிருந்தபோது "நான் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பேன் ஆனால் பைத்தியக்காரர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கமாட்டேன். தயவு செய்து என்னை பேசுவதற்கு இடமளியுங்கள். இல்லையென்றால் இங்கே இடையூறு ஏற்படுத்துபவரை வெளியே போடுங்கள்" என்று அமைச்சர் சபாநாயகரிடம் கூறினார்.

இதன்போது ஒழுங்கு பிரச்சினையை எழுப்பி எழுந்த அருச்சுனா 'அவர் பதிலை வழங்கவில்லை. அவர் இப்போது பைத்தியம் என்று கூறுகின்றார். அந்த வசனத்தை நீக்குமாறு கோருகின்றேன்' என்றார்.

இதனை தொடர்ந்தும் அமைச்சர் அர்ச்சுனாவுக்கு பதிலளிக்காது, அமைச்சின் அறிவித்தலை வாசித்து அமர்ந்தார்.

## எதிர்க் கட்சித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் அது ஏற்கனவே கூறப்பட்ட ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில், சஜித் பிரேமதாச சொத்து மற்றும் பொறுப்பு தகவல்களை சமர்ப்பிக்கவில்லை என்று கூறி ஒரு குழு மீண்டும் ஒரு அவதூறு பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது போல் தெரிகிறது.

## தையிட்டி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நிலையியற் கட்டளையின் 27.2 பிரகாரம் அண்மையில் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு தையிட்டி பிரதேசத்தில் திஸ்ஸ விகாரை எனும் விகாரை ஒன்று உள்ளது. இந்த விகாரை பதிவு செய்யப்படவில்லை. இந்த விகாரையின் காணி தொடர்பான விடயங்கள் ஆராயப்படுகின்றன.

இந்த பகுதியில் இடம்பெறும் போராட்டங்கள் குறித்து பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. இந்தப் போராட்டங்கள் குறித்து அமைச்சுக்கு உத்தியோகபூர்வமாக ஏதும் அறிவிக்கப்படவில்லை. ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை அடிப்படையாகக் கொண்ட தகவல்களே உள்ளன.

இந்த விகாரை அமையப்பெற்றுள்ள காணியானது காணி அமைச்சினால் கைப்பற்றப்பட்டு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படவில்லை. காணி அரசுடைமையாக்கல் சட்டத்தின் பிரகாரம் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காத காரணத்தால் அதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் இதுவரையில் பிரசுரிக்கப்படவில்லை.

இந்தக் காணி தொடர்பில் அமைச்சு மட்டத்தில் எவ்வித தீர்வும் எடுக்கப்படாத நிலையில், அடுத்தக்கட்ட நடவடிக்கைகளுக்குரிய தீர்மானங்கள் ஏதும் எடுக்கப்படவில்லை. இந்தக் காணி தமக்குரியது என்று போராடும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு பல சுற்று பேச்சு நடத்தினோம்.

அரசுத் தலைவர் எம்மை அழைத்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளார். யாழ் மாவட்ட சிவில் சமூகத்தினருடனும் கலந்துரையாடியுள்ளோம். தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகத்தின் தலைவர் ரொஹான் பிரனாந்துவின் தலைமையில் குழு நியமிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தையிட்டி பிரச்சினைக்கு ஒரு இடத்தில் மாத்திரம் தீர்வு காண முடியாது. புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சு, காணி அமைச்சு ஆகிய அமைச்சுக்கள் ஒன்றிணைந்தே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்கு உண்மை நோக்கத்துடன் தீர்வு காண்பதற்கு எடுத்த நடவடிக்கைகளை ஆராய வேண்டும். இந்த பிரச்சினைக்கு உடன் தீர்வு காணும் தன்மை கிடையாது. நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் தலையீட்டின் ஊடாக தையிட்டி திஸ்ஸ பிரச்சினைக்குத் தீர்வு காண எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## இலஞ்ச, ஊழல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படவில்லை.

துறைமுக அதிகார சபையின் செயற்பாடுகள் பிரச்சினைக்குரியதாக உள்ளது. சுங்கத்தில் இருந்து அண்மையில் 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. எதிர்வரும் நாட்களில் சுங்கம் மற்றும் துறைமுக அதிகார சபை கோப் குழுவுக்கு அழைக்கப்படுமா,

தென் மாகாணத்தில் மித்தெனிய பகுதியில் அண்மையில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளுடனான சிவப்பு நிறத்திலான இரண்டு கொள்கலன்கள் தொடர்பில் சர்வதேச புலனாய்வு பிரிவு முன்கூட்டியதாகவே எச்சரிக்கை விடுத்துள்ளது. இருப்பினும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களும் இவ்வாறே இடம்பெற்றன.

நாட்டில் பொலிஸ் இராச்சியமே காணப்படுகிறது. பொலிஸார் சட்டத்தை தமது கையில் எடுத்து செயற்படுகிறது. கம்யூனிஸ்ட் ஆட்சி முறைமையை இலங்கையில் உருவாக்க முடியாது. ஜனநாயகத்தின் மீது கை வைத்தால் நேபாளத்துக்கு நேர்ந்த கதியே இலங்கைக்கும் நேரிடும்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் தலைவர் பற்றி மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் உறுப்பினர் நந்தன குணதிலக புதிய விடயத்தை தற்போது குறிப்பிட்டுள்ளார். மக்கள் விடுதலை முன்னணியின் சட்ட பிரிவில் உறுப்பினராக இருந்தவரே இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்தார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய ஆணைக்குழு சுயாதீனமாகவா செயற்படுகிறது. நந்தல குணதிலகவின் கருத்து தொடர்பில் ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்ன. ஆளும்தரப்பின் அடக்குமுறைகளை இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய ஆணைக்குழு செயற்படுத்துகிறது. எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் ஆணைக்குழுவால் இலக்கு வைக்கப்பட்டுள்ளார்கள். ஆணைக்குழு இன்று அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது.

ஒரு நாடு ஒரு கட்சி கொள்கையை அமுல்படுத்த ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. வாகன தகடு தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டார். இந்த திட்டத்தின் விலைமனுகோரல் வழங்கப்பட்டுள்ளது. சீனாவை மகிழ்விக்க சென்றால் இந்தியாவை பகைத்துக்கொள்ள நேரிடும். குறுக்கு வழியில் செயற்பட்டால் ஒருபோதும் முன்னேற முடியாது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## அருச்சுனா எம்.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2இன் கீழ் கேள்விகளை முன்வைத்து உரையாற்றுகையில் இந்தக் கேள்வியை எழுப்பினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடந்த சிறப்பு ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தங்களுடையதலைமையில் விவாதிக்கப்பட்ட விடயங்களில் இரண்டு முக்கியமான விடயங்கள் பொதுமக்களின் நலன் கருதி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டிய விடயமாக மாற்றப்பட்டிருக்கிறது. முதலாவது பலாலிவானூர்திநிலையம். சர்வதேசவானூர்தி நிலையம்என்றுதாங்கள்சொல்லிக்கொள்ளும் ஒரு இடம். இரண்டாவது காங்கேசன் துறை இறங்கு துறை. அதை துறைமுகம் என்றும் பொருள் கொள்ளலாம்.

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியில் எந்த ஒரு நபருக்கும் இல்லாத அக்கறையை இந்த ஆளும்தரப்பு

செலுத்துவது கண்டுப் பூரிப்படைந்து தங்கள் ஆளும்தரப்பின் அர்ப்பணிப்புகளை நினைத்து பூரிப்படையும்

பாமர மக்களில் நானும் ஒருவன். ஆனால் வெறும் வாய்ப்பேச்சுகளால் ஒரு வருடத்தை கடந்து விட்ட ஆளும்தரப்பிடமிருந்து நிலையான அபிவிருத்தி ஒன்றை வடக்கு மாகாணத்துக்கு பெற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்ற அடிப்படையில் தங்களிடம் கேட்க வேண்டி இருக்கிறது.

வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற பலாலி உள்நாட்டு வெளிநாட்டு வானூர்தி நிலைய அபிவிருத்திக்காக தங்களுடைய ஆளும்தரப்பால் 2025 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட மொத்த பணம்

எவ்வளவு? அதில் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை செலவழிக்கப்பட்ட பணம் எவ்வளவு? அதற்குரிய ஆதாரங்களைநாடாளுமன்றத்தில் பொதுமக்களுக்காக சமர்ப்பிக்க முடியுமா?

வடக்கின் ஒரே ஒரு பொருளாதார துறைமுகமாக இருக்கும் காங்கேசன் துறை இறங்குதுறைஅபிவிருத்திக்காகதங்களுடைய 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம்

எவ்வளவு? அதில் 2025 செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி வரை செலவழிக்கப்பட்ட பணம் எவ்வளவு?அதனை ஆதாரங்களுடன் இந்த நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியுமா?

வடக்கு மாகாணத்தில் கடந்த 2025 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சிறு சிறு துறைமுகங்கள் மற்றும் இறங்கு துறைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு? அவற்றில் செலவழிக்கப்பட்ட பணம எவ்வளவு?

கடந்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் மாவட்டச் செயலர். பிரதீபன் வலிகாமம் வடக்கில் மீள் குடியேற்றம் தொடர்பாகவும் இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட மக்களின் காணி தொடர்பாகவும் கருத்துக்களை

தெரிவித்துள்ளார்.அந்தக் கருத்துக்களுக்கு அமைய, பலாலி வானூர்தி நிலையத்தின் தற்போதைய நில அளவு எவ்வளவு? பலாலி வானூர்திநிலையத்தில்சட்டரீதியாகஆளும்தரப்பு கொண்டிருக்கும் நில அளவு எவ்வளவு? வானூர்தி நிலையத்தில் சட்டரீதியாக அல்லாத பொது மக்களின் கையகப்படுத்தப்பட்டு இருக்கும் காணியின் நில அளவு எவ்வளவு? பொது மக்களின் காணிகளில் இதுவரை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீடு எத்தனை குடும்பங்களுக்குவழங்கப்பட்டது? எப்போது வழங்கப்பட்டது? யாரால் வழங்கப்பட்டது? அதன் மொத்த பெறுமதி

எவ்வளவு?

பலாலி வானூர்தி நிலைய விரிவாக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்ட தனியார் காணிகளில் இதுவரை ஆளும்தரப்பு விடுவித்திருக்கும் தனியார் நிலப்பரப்பு எவ்வளவு? உரிமையாளர்களால் உரிமை கோரப்படாத தனியார் விடுவிக்கப்பட்ட காணிகள் எவ்வளவு? எத்தனை குடும்பங்கள்?,இலங்கையின் வடக்கு கிழக்கு தவிர்ந்த வேறு எந்தெந்தப் பகுதியில் ஆவது தனியார்காணிகள்வானூர்திநிலைய அல்லது துறைமுக அபிவிருத்திக்காக உள்வாங்கப்பட்டு இதுவரை பணம்

செலுத்தப்படாமல் இருக்கிறதா? அவ்வாறாயின் அவற்றின் விவரங்களை சமர்ப்பிக்க முடியுமா?

காங்கேசன் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யசர்வதேசதுறைமுகமாகமாற்றமுடியாது என்றதங்களுடைய முடிவினை அவதானித்த பின்னர், அவ்வாறான ஒரு முடிவுக்கு தாங்கள் வந்தது என்ன காரணம் என்ன என்பதை விளக்க முடியுமா? அவ்வாறாயின் அம்பாந்தோட்டைதுறைமுகத்தைஅபிவிருத்தி செய்தபணம், மத்தள வானூர்தி நிலையத்தை அபிவிருத்தி செய்த பணம் வீண் விரயம் செய்யப்படுகிறது என்று நீங்கள் கருதினால் பலாலிவானூர்திநிலையத்தினால்பயனடைய போகும் சர்வதேச பயணிகளின் வருடாந்த வரவையும் அனுமானமாக அதனால் ஏற்படப் போகின்ற லாபத்தையும் சொல்ல முடியுமா?

பலாலி வானூர்தி நிலையம் அபிவிருத்தி செய்யப்படுகின்ற போது அதுவும் மத்தள வானூர்தி நிலையம் போன்று சர்வதேச வானூர்திங்களில் வரவுகள் அற்ற ஒரு வானூர்தி நிலையமாக மாற்றமடையும் என்ற கருத்து பொதுமக்களிடையே இருப்பதால் வானூர்தி நிலையம் அபிவிருத்தி தவிர்ந்த வேறெதுவோ காரணங்களுக்காக வானூர்தி நிலையம்என்றபோர்வையில்பொதுமக்களின் காணிகள் தகுந்த பண கொடுக்கல் வாங்கல் பொதுமக்களுக்கு வழங்கப்படாமல் இராணுவ ஆக்கிரமிப்பால் அபகரிக்கப்படுகிறது என்ற கூற்றை ஏற்றுக்கொள்கிறீர்களா? இன்றேல் ஏன்?

வானூர்திநிலையம்மாத்திரம்அபிவிருத்தி செய்யப்படுவதும் காங்கேயன் துறை முகம் அபிவிருத்தி செய்யப்படாததும் இராணுவ அரசியல் நோக்கங்களுக்காக பொதுமக்களின் காணிகள் பறிக்கப்படுகின்ற என்ற பொதுமக்களின் கூற்றை ஏற்றுக்கொள்கிறீர்களா இல்லை என்றால் ஏன்? என்று கேள்வியெழுப்பினார்.

## வெறுப்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூக ஊடகத் தளங்களில் பரப்பப்படும்,குறிப்பாக .இலங்கையில் இன முறுகலை அல்லது கும்பல் வன்முறைகளைத் தூண்டும் தவறான தகவல்கள் மற்றும் வெறுப்புப்பேச்சுக்களின் உள்ளடக்கங்கல்கள் பரப்புதலை கண்காணித்துக் கட்டுப்படுத்துவதற்காக 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினி குற்றச்செயல்கள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் ஊடாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்தகைய ஆபத்தான உள்ளடக்கங்களைப் பரப்புவதைத் தடுப்பதற்காகச் சமூக ஊடக நிறுவனங்களுடன் தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்களுடனும் ஏனைய சம்பந்தப்பட்ட பங்கீட்டாளர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு தண்டனைச் சட்டக்கோவை 20(120) ஆம் உறுப்புரையின் 6 ஆம் பிரிவின் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு சொலிசிட்டர் ஜெனரால் விராஜ் ஜயரத்ன தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, நீதி அமைச்சு, டிஜிட்டல் அபிவிருத்தி அமைச்சு மற்றும் நீதியமைச்சு ஆகிய பிரதான அமைச்சுக்கள் கூட்டாக இணைந்து செயற்படுகின்றன.

சமூக கட்டமைப்பில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் செய்திகள் மற்றும் கருத்துக்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த சமூக நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் என்றார்.

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுரகுமார ஆளும்தரப்பு மற்றும் இலங்கை மக்கள் சார்பில் சீனாவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். 1949ஆம் ஆண்டு சீன மக்கள் குடியரசை ஏற்றுக்கொண்ட பிரதான நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

அன்றிலிருந்துதொடரும்இருநாடுகளுக்கும் இடையிலானஉறவைமேலும்வலுப்படுத்தும் வகையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஒக்டோபரில் பீஜிங்கிற்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்யவுள்ளார். அதேபோன்று சீனாவின் 'ஒரு சீன' கொள்கையையும் எமது வெளிநாட்டு;க் கொள்கைளின் ஊடாக ஸ்திரமாக ஏற்றுக் கொள்கின்றோம்.

இலங்கை பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையிலும் முன்னேற்றப் பாதையிலேயே பயணிக்கின்றது. அதற்கு சகல நாடுகளதும் ஒத்துழைப்பு இன்றியமை யாததாகும். அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த போது 15 இணக்கப்பாட்டுஒப்பந்தங்கள்கைச்சாத்திடப்பட்டன. அதற்கமையசீனாவிடமிருந்து500மில்லியன் நன்கொடையாக வழங்கப்பட்டதை மறக்க முடியாது.

இது இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு பேருதவியாக அமையும். 1949ஆம் ஆண்டு சீனா 'சீன மக்கள் குடியரசாக' அறிவிக்கப்பட்ட போது அதனை அங்கீகரித்த முதலாவது நாடு இலங்கையாகும். இது எமது நாடுகளுக்குமிடையிலான நட்புறவுக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். இதேபோன்று தொடர்ந்தும் சீனாவுடன் நல்லுறவைப் பேணுவதே இலங்கை ஆளும்தரப்பின் எதிர்பார்ப்பாகும் என்றார்

முன்னாள் அரசுத் தலைவர்களான மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ச உட்பட முன்னாள் இந்நாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பல அரசியல் பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவனத்திற்கொள்ளும்போதுகாங்கேசன்துறை துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக மாற்றியமைப்பது பொருளாதாரத்துக்கு வினைத்திறனானதாக அமையாது. இருப்பினும் அடிப்படை மட்டத்திலான அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படுமென போக்குவரத்து,நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும்சிவில்வானூர்திசேவைகள்அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது நிலையியற் கட்டளை 27/2 இன்கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு 2017.05.02 ஆம் திகதியன்று அமைச்சரவை தீர்மானத்துக்கமைய துறைமுக அதிகார சபைக்கு பொறுப்பாக்கப்பட்டது. இதற்கமைய ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் இந்தியாவின் () வங்கிஊடாக முன்னெடுக்கப்பட்டதுடன், 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆலோசனை சேவை ஒப்பந்தத்துக்கு அமைய அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இயலுமான வகையில் அபிவிருத்தி பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு மதிப்பீட்டு நிதி 2021 ஆம் ஆண்டு மீளாய்வுடன் 45.27 அமெரிக்க டொலரில் இருந்து 61.5 டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்துக்குரிய கடன் ஒப்பந்தத்துக்கு அமைய 75 சதவீதம் பண்டம் மற்றும் சேவைகள் இந்தியாவில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த செலவு 2012 ஆம் ஆண்டு மேலதிக மதிப்பீட்டுடன் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தி பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இந்திய ஆளும்தரப்பின் நிதி ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இறுதி தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை.

காங்கேசன்துறை துறைமுகத்தை அண்மித்த கடற்பகுதி 10 மீற்றர்- 12 மீற்றர் வரை ஆழ பரப்பைக் கொண்டுள்ளதுடன் அந்த ஆழத்தை மேலும் அதிகரிப்பதற்கு அதிக நிதியை செலவிட வேண்டும். இந்த துறைமுகத்துக்கான எதிர்கால கேள்வி மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு ஆகியவற்றை கவனத்திற்கொள்ளும்போதுகாங்கேசன்துறை துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக மாற்றியமைப்பது பொருளாதாரத்துக்கு வினைத்திறனானதாகஅமையாது.இருப்பினும் அடிப்படை மட்டத்திலான அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சமாதானத்தின் புதிய வாயில்

பல தசாப்தங்களாக இரத்தமும் துயரமும் நிறைந்த பாலஸ்தீன மக்களின் வாழ்வில், சர்வதேச அங்கீகாரம் என்ற புதிய அலை ஒன்று எழுந்துள்ளது. நீண்ட காலமாக நிலவிய யுத்தமும் துன்பமும் மத்தியில், உலக நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக பாலஸ்தீனத்தை ஒரு அரசாக அங்கீகரிப்பது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணமாகும். இது வெறும் சட்ட ரீதியான விவாதமோ, குறியீட்டு அறிகுறியோ அல்ல; மாறாக, அந்நாட்டின் மக்களுக்கு ஒரு நம்பிக்கைக் குரல் மற்றும் அரசியல் அழுத்தத்தின் புதிய தளம் ஆகும்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களிலிருந்தே பாலஸ்தீன் – இஸ்ரேல் பிரச்சினை ஒரு தீப்பெட்டியாக மாறி உலக அரசியலைப் பிளந்து கொண்டிருக்கிறது. இன்று வரை, ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பலியானார்கள், இலட்சக்கணக்கானோர் அகதிகளாக வாழ்கின்றனர். இந்த துயர வட்டம் முடிவில்லாத ஒன்று போல் தோன்றினாலும், அண்மையில் பிரான்ஸ், கனடா, இங்கிலாந்து, பெல்ஜியம் உள்ளிட்ட எட்டு முக்கிய நாடுகள் பாலஸ்தீனை அங்கீகரித்துள்ளன. இது வெறும் வெளிப்படையான வெளிநாட்டு கொள்கை மாற்றம் அல்ல; உலகம் இனி அமைதிக்கான புதிய வாயிலைத் திறக்க வேண்டும் என்பதற்கான சுட்டிக்காட்டாகும்.

இங்கிலாந்தின் முடிவு தனித்துவமானது. ஏனெனில், இஸ்ரேல் நாட்டின் உருவாக்கத்திலும் பாலஸ்தீன் மோதலின் ஆரம்பத்திலும் அந்த நாடு முக்கிய பங்கு வகித்தது. இப்போது அதே நாடு பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது, இரு–நாட்டு தீர்வு (Two-State Solution) என்பதே நம்பகமான வழி என்கிற சர்வதேச ஒப்புமைக்கு வலுச்சேர்க்கிறது. இது உண்மையில் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன் இருவருக்கும் பாதுகாப்பும் அமைதியும் ஏற்படுத்தக் கூடிய பாதை.

இஸ்ரேல் மற்றும் சில நாடுகள் இந்த அங்கீகாரத்தை எதிர்த்து பேசுகின்றன. அவர்கள், இது பயங்கரவாதத்திற்கு பரிசளிப்பதாகக் கூறுகின்றனர். ஆனால், குறிப்பிடத்தக்க வகையில், பாலஸ்தீனை அங்கீகரித்த நாடுகளில் பல நாடுகள் ஹமாஸ் தாக்குதலால் தங்கள் சொந்த குடிமக்களையே இழந்துள்ளன. இருந்தாலும், அவர்கள் “பாலஸ்தீன மக்களுக்கான ஆதரவு என்பது ஹமாஸுக்கான ஆதரவு அல்ல” என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளனர். மாறாக, ஹமாஸ் அரசியலில் இடம் பெறக்கூடாது என்றும், பாலஸ்தீன அதிகாரப்பூர்வ நிர்வாகத்திற்கே (Palestinian Authority) அங்கீகாரம் வழங்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகள் குறிப்பாக பிரான்ஸ், மத்திய கிழக்கு நாடுகளான சவுதி அரேபியா, எகிப்து போன்றவற்றுடன் இணைந்து, சாந்தி முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. அவர்கள், பாலஸ்தீன் மீண்டும் ஹமாஸ் போன்ற சக்திகளின் கையில் சிக்காதவாறு, ஐ.நா. மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) கண்காணிப்பு அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்று பரிந்துரைக்கின்றனர். மேலும், வெளிநாடுகளில் உள்ள பாலஸ்தீன அதிகாரிகள் தங்கள் நாட்டின் கல்வி மற்றும் நிர்வாக அமைப்புகளை மாற்றி, வெறுப்பு சிந்தனையை முற்றிலும் நீக்குவதாக வலியுறுத்தியுள்ளனர்.

இந்த முன்னேற்றங்கள் அனைத்தும் ஒரே செய்தியையே உலகிற்கு தருகின்றன: இனி இரத்தப்பாய்ச்சல் நிற்க வேண்டும். காசாவில் நடக்கும் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும். கைதிகள் தங்கள் குடும்பங்களுக்கு திருப்பித் தரப்பட வேண்டும். மிக முக்கியமாக, பசியால் வாடும் குழந்தைகளுக்கும் மக்களுக்கும் உதவி, உணவு, மருந்து தடையில்லாமல் செல்ல வேண்டும்.

பாலஸ்தீனத்தின் அரசியலமைப்பு அங்கீகாரம், ஒரு குறியீட்டு வெற்றியே அல்ல; அது எதிர்கால சமாதானத்திற்கான அடித்தளமாக இருக்கவேண்டும். அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இதனை மறுப்பதற்குப் பதிலாக, உரையாடல் மேசையில் அமர்ந்து, உலக நாடுகளின் விருப்பத்தை மதிக்க வேண்டும். ஒரு சுயாட்சியுடைய பாலஸ்தீன் மற்றும் பாதுகாப்பான இஸ்ரேல் என்ற இரட்டை நம்பிக்கையே இந்த பிராந்தியத்தில் நிலையான அமைதிக்கான ஒரே வழி.

இன்றைய உலக அரசியல் சூழலில், சக்திவாய்ந்த நாடுகள் தங்கள் சொந்த நலனுக்காக மட்டுமே முடிவெடுக்கும் காலம் கடந்துவிட்டது. சிறிய நாடுகளின் துயரத்தையும் பொதுமக்களின் உரிமைகளையும் உலகம் இனி கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. எனவே, இந்த அங்கீகாரம் ஒரு சின்னப்பொருளல்ல; மனிதநேயத்தின் குரல்.

பாலஸ்தீன் மக்களின் குரல் நூற்றாண்டுகளாக அடக்கப்பட்டு வருகிறது. இன்று அந்த குரலை உலகம் கேட்கத் தொடங்கியுள்ளது. இந்த அங்கீகாரம் உண்மையான அமைதிக்கான பாதையைத் திறந்து விட வேண்டும் என்பதே நமது நம்பிக்கை. உலகம் இனி கண்மூடி நிற்கக்கூடாது. அமைதி, உரிமை, நியாயம் என்ற மூன்று அடிப்படைகளும் பாலஸ்தீன் – இஸ்ரேல் பிரச்சினையின் தீர்வாக மாற வேண்டும்.

# நீதி அமைச்சரின் சொத்து விவர ஆவணத்தில் ஒப்பம் இல்லை

### தயாசிறி எம்.பி. சீற்றம்

நீதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள சொத்து விவரங்களில் அவரது கையெழுத்து இல்லை. இவ்வாறு சொத்துப் பிரகடனத்தில் ஆளுந்தரப்பு குறைபாடுகளை வைத்துக் கொண்டு, எதிர்க்கட்சியினர் மீது குறைகூறிக் கொண்டிருக்கிறது. எனவே தமது வரிப்பணத்தை கொள்ளையடித்துள்ளது யார் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

நாம் எமது சொத்து விவரங்களைச் சரியாக சமர்ப்பித்திருக்கின்றோம். ஆனால் நீதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள சொத்து விவரங்களில் அவரது கையெழுத்து இல்லை. எந்தவொரு தவறும் செய்யாதவர்கள் எதற்காகவும் அஞ்சத் தேவையில்லை. நாம் ஆளும்தரப்பைக் கண்டு அஞ்சவில்லை. ஆனால் தவறு செய்தவர்களை கைது செய்யும்போது அது எதிர்க்கட்சிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கக்கூடாது. ஆளுங்கட்சியில் எவரேனும் தவறிழைத்திருந்தால் அவர்களும் கைது செய்யப்பட வேண்டும்.

323 கொள்கலன்கள் துறைமுகத்திலிருந்து எவ்வித சோதனைகளும் இன்றி விடுவிக்கப்பட்டதில் பிரதானமானவர் அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, அடுத்தது அமைச்சர் பிமல் ரத்நாயக்க. பொலிஸார் ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது உண்மையெனில் இவர்களுக்கெதிராகவும் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்களின் வரிப்பணத்தை சூறையாடவில்லை. எனவே எம் மீது வழக்கு தொடரப்பட்டாலும் தைரியமாக நாம் அதை எதிர்கொள்வோம்.

எம் மீது போலியான வழக்கு தாக்கல் செய்யப்பட்டால் அதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம். மக்களுக்கு நாம் உதவி செய்திருக்கின்றோமே தவிர, ஜே.வி.பியினரைப் போன்று பொய் கூறி மக்களிடமிருந்து எதையும் கொள்ளையிடவில்லை. ஆனால் ஜே.வி.பி. மக்களின் சொத்துக்களை அழித்து தமது சொத்துக்களை பெருமளவில் அதிகரித்துக் கொண்டுள்ளது. அரசியல் செயற்பாடுகளுக்கு அவர்கள் தமது சொந்த பணத்தை செலவிடுவதில்லை என பகிரங்கமாகக் கூறுகின்றனர். மக்கள் இதனை புரிந்து கொள்ள வேண்டும்.

ஆளும்தரப்பு தேர்தல் காலங்களில் மக்களுக்கு வழங்கிய போலியான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. கடந்த ஓராண்டுக்குள் ஆளும்தரப்பால் எதையுமே செய்து கொள்ள முடியாது போயுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள அழுத்தத்தின் காரணமாகவே எதிர்க்கட்சியினர் மீது அரசியல் பழிவாங்கல்களை முன்னெடுத்துள்ளனர் என்றார்.

### அறுகம்பையில் உள்ள

# இஸ்ரேலிய சபாத் இல்லம் மக்களை பீதியடைய வைத்தால் நடவடிக்கை

### நாடாளுமன்றில் புத்தசாசன அமைச்சர் பதில்

அறுகம்பையில் அமைந்திருக்கும் இஸ்ரேலின் சபாத் இல்ல நடவடிக்கைகள் மக்கள் பீதியடையும் வகையில் இடம்பெறுமாக இருந்தால், அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கி இருக்கிறதென புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் உதுமாலெப்பை கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

உதுமாலெப்பை தனது கேள்வியில், பொத்துவில், அறுகம்பே பிரதேசத்தில் அமைந்துள்ள இஸ்ரேலின் சட்டவிரோத சபாத் இல்லத்தை மூடிவிட வேண்டும் என பொத்துவில் பிரதேச சபை ஒருங்கிணைப்பு கூட்டத்திலும் பொத்துவில் பிரதேச சபை அமர்விலும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எனவே இதனைத் தடுப்பதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன என கேட்கிறேன் என்றார்.

அதற்கு அமைச்சர் அளித்த பதிலில் தெரிவித்ததாவது:

பொத்துவில், அறுகம்பே பிரதேசத்தில் முஸ்லிம்களின் பள்ளிவாசலுக்கு அருகில் இஸ்ரேலுக்கு சொந்தமான சபாத் இல்லம் இயங்கிவருவது தொடர்பில் பொத்துவில் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருக்கும் தீர்மானம் குறித்து எமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் இதற்குத் தேவையான நீண்டதொரு தலையீட்டை இலங்கைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். அதேபோன்று இது தொடர்பான தகவல்களைத் தேடிப்பார்த்து, நீதிமன்றத்துக்கும் தகவல் வழங்கி இருக்கிறது.

சபாத் இல்லாம் அமைக்கப்பட்டிருக்கும் காணியை, முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து வெளிநாட்டவர் ஒருவர் விலைக்கு பெற்றுக்கொண்டிருக்கிறார். என்றாலும் அதன் உரிமையாளர் தற்போது அந்த இடத்தில் இல்லை என்பது பிரதேச செயலகத்தினால் தேடிப்பார்க்கும்போது தெரியவந்துள்ளது. சில நேரம் அவர் வெளிநாட்டுக்குச் சென்றிருக்கலாம்.

அதேநேரம், அந்த இடத்தில் இடம்பெறக்கூடிய விடயங்கள் மக்கள் குழப்பமடையும் வகையில் இடம்பெறக்கூடாது என்றும், அந்த இடம் விடுதி அமைப்பில் செயற்படுவதாக இருந்தால், அந்த விடயத்துக்கு மாத்திரமே அதனைப் பயன்படுத்துமாறு நீதிபதி ஆலோசனை வழங்கி இருக்கிறார். இதற்கு பின்னர் மக்கள் பீதியடையும்

வகையில் ஏதாவது சம்பவம் இடம்பெற்றால், அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் நீதிபதி பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கி இருக்கிறார்.

சட்டவிரோத இந்த சபாத் இல்லத்தை அகற்றுவதற்கான அதிகாரம் எமது அமைச்சுக்கு இல்லை. அது பாதுகாப்பு அமைச்சுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். அதனால் பாதுகாப்பு அமைச்சிடம் இதுதொடர்பான விடயங்களை கேட்டறிந்துகொள்ளலாம் என்றார்.

# நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றிற்கு அளிக்கை

2026நிதியாண்டுக்கானநிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் அளிக்கை செய்தார்.

சபாநாயகர் தலைமையில் நேற்று நாடாளுமன்றம் கூடியபோது அமைச்சர் நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை சமர்ப்பித்தார்.

இதற்கமையஅரசுத்தலைவர் அநுரகுமார அரசின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் செலவீனமாக 443435கோடியே 64,68000 ரூபாஒதுக்கப்பட்டுள்ளது.2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் செலவீனமாக 421824 கோடியே 80,18000 ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2026 ஆம்ஆண்டுக்கான செலவீனம் 21610கோடியே 84, 50000ரூபாவினால் அதிகரிக்கப் பட்டுள்ளது.

இந்த செலவீனத்துக்கான நிதி ஒதுக்கீடுகளில் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்களுக்காக 64800 கோடி ரூபா ஒதுக்கப்பட் டுள்ளது. 2025 ஆம் ஆண்டு பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்களுக்காக 61744கோடியே 50இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2026 ஆம் ஆண்டுக்காக 3055 கோடியே 50 இலட்சம் ரூபா மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசுத் தலைவர் அநுரகுமார வசமுள்ள பாதுகாப்பு அமைச்சு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,டிஜிட்டல் பொருளாதார அமைச்சு ஆகியவற்றுக்கும் அரசுத் தலைவர்க்கான செலவினமுமாக மொத்தம் 111715 கோடியே 9980000இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 2025 ஆம் ஆண்டுக்கு அரசுத் தலைவர் செலவீனமாக 299,29,80,000 ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2026 ஆம் ஆண்டுக்கான அரசுத் தலைவர் செலவீனமாக 1137,79இ80000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.இது 2025 ஆம் ஆண்டு அரசுத் தலைவர் செலவீனத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையை விடவும் 838,50,00000 ரூபா அதிகமாகும்

பிரதமர் செலவினமாக 2025 ஆம் ஆண்டுக்கு 117,0000,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் 2026 ஆம் ஆண்டுக்கான பிரதமருக்கான செலவீனமாக 97,50,00000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2025 ஆம் ஆண்டு பிரதமரின் செலவீனத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையை விடவும்19,50,00,000 ரூபா குறைவானதாகும் .

அதேவேளை 2025 ஆம் ஆண்டு ,சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு ,பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி, அமைச்சு, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுஉள்ளிட்ட இன்னும் சில அமைச்சுகளுக்கான ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை விடவும் 2026 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு எனப்படும் வரவு செலவுத்திட்ட உரை அரசுத் தலைவர்யும் நிதி அமைச்சருமான அநுரகுமார திசாநாயக்கவினால் எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதி நிகழ்த்தப்படவுள்ளது.வரவு செலவுத் திட்டம் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 8 ஆம் திகதி முதல் நவம்பர் 14 வரை 6 நாட்களுக்கு நடைபெறவுள்ளதுடன், இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு அன்று மாலை 6 மணிக்கு நடைபெறும்.

வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு அல்லது குழுநிலை விவாதம் நவம்பர் 15 ஆம் திகதி முதல் டிசம்பர் 5 ஆம் திகதி வரை 17 நாட்களுக்கு இடம்பெறவுள்ளது வரவு செலவுத் திட்ட மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 5 ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் பறந்தார் அநுர

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, தனது பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து வியாழக்கிழமை இரவு ஜோன் எஃப். கெனடி சர்வதேச வானூர்தி நிலையத்திலிருந்து ஜப்பானுக்குப் பயணமானார்.

ஜப்பானிய ஆளும்தரப்பின் அழைப்பின் பேரில், அரசுத்தலைவர் செப்டம்பர் 27 முதல் 30 ஆம் திகதி வரை ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்கிறார்.

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுடன் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரதும் இந்த விஜயத்தில் இணைந்து கொண்டுள்ளார்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

•CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# சுதந்திரக் கட்சியை மீண்டும் பலமாக கட்டியெழுப்புவோம்

## முன்னாள் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியைமீண்டும் மக்கள்மத்தியில்பலம்மிக்ககட்சியாகக் கட்டியெழுப்புவோம். ஆட்சி அதிகாரம் என்பது தேர்தல் ஊடாக ஜனநாயக ரீதியில் பரிமாற்றப்பட வேண்டும். அதனைவிடுத்து துப்பாக்கி முனையில் இந்த ஆளும்தரப்பு அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள முயற்சித்தால் அதற்கு மக்கள் தகுந்த பதிலை வழங்குவர் என முன்னாள் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் பிரதமர் டி.பண்டாரநாயக்கவின் 66ஆவது நினைவு தின நிகழ்வு நேற்று ஹொரகொல்லவிலுள்ள நினைவு தூபி வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்காலத்தில் இந்தக் கட்சியை மீண்டும் மக்கள் மத்தியில் பலம் மிக்க கட்சியாக கட்டியெழுப்புவோம். தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு தற்போது தமக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரத்தை மீள கையளிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளது. அவ்வாறு சர்வாதிகாரமாக துப்பாக்கி முனையில் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டிருக்க முடியாது.

அதற்கு நாம் இடமளிக்கவும் போவதில்லை. ஆட்சி அதிகாரம் என்பது தேர்தல் ஊடாக ஜனநாயக ரீதியில் பரிமாற்றப்பட வேண்டும். 2020இல் கோட்டாபய ராஜபக்ச 69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற போதும் இதனையே கூறினார். அவரால் 10 - 15 ஆண்டுகள் ஆட்சி செய்ய முடியும் என்று நாமும் நம்பினோம். ஆனால் இரண்டே ஆண்டுகளில் அவரால் ஆட்சியை ஒப்படைத்துவிட்டுச் செல்ல நேர்ந்தது.

எனவே இந்த ஆளும்தரப்புக்கு அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாவிட்டாலும், உரிய காலத்தில் தேர்தலை நடத்தி அதன் மூலம் மக்கள் வழங்கும் ஆணைக்கமையவே ஆட்சி செய்ய முடியும். அதனை விடுத்து வன்முறைகளை கைகளில் எடுத்தால் மக்கள் அதற்குச் சிறந்த பதிலை வழங்குவர் என்றார்.

# வேலிக்கு ஓணான் சாட்சி

# எதிர்க்கட்சிகள் மீது அமைச்சர் பாய்ச்சல்

ஊழல்வாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தின் பிரகாரம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால் எதிர்க்கட்சியினர் அச்சமடைந்து அவர் மீது அரசியல் முத்திரை பதிக்க முயற்சிக்கிறார்கள். 'வேலிக்கு ஓணான் சாட்சி' போல ஊழல்வாதிகளுக்கு எதிர்க்கட்சியினர் ஆதரவாக உள்ளார்கள். நீதிமன்றம் சுயாதீனமாக செயற்படுகிறது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் என தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கோப் குழு அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முறையான விசாரணைகளின் ஊடாக பல விடயங்கள் வெளியாகும் போது ஊழல்வாதிகள் அச்சமடைவதையிட்டு நாங்கள் கலக்கமடைய போவதில்லை. நாட்டில் சட்டவாட்சி முறையாக செயற்படுத்தப்படும் போதும் மோசடியாளர்கள் அச்சமடைந்துள்ளார்கள். அரச சேவையாளர்கள் நெருக்கடியுள்ளாகியுள்ளார்கள் என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள். அரச சேவையாளர்கள் சட்டத்தின் பிரகாரம் சிறந்த முறையில் செயற்படுவார்களாயின் எவருக்கும் அச்சமடைய தேவையில்லை. அதனை விடுத்து கடந்த காலங்களை போன்று ஊழல் மோசடியுடன் செயற்பட்டால் அச்சமடைய வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி கடந்த 24 ஆம் திகதி கல்கிசை நீதிமன்றம் என்னையும், அமைச்சர் வசந்த சமரசிங்கவையும், நகர மேயர் ரஞ்சன் ஜயலாலையும் கைது செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளதாக குறிப்பிட்டார். அந்த வழக்கு தொடர்பான ஆவணம் மற்றும் வழக்கு குறிப்பு என்னிடம் உள்ளது. இந்த ஆவணங்களில் எவ்விடத்திலும் எம்மை கைது செய்யுமாறு குறிப்பிடப்படவில்லை. ஏன் அவர் இவ்வாறு குறிப்பிட வேண்டும்.?

ராஜபக்சர்கள் சட்டத்தை எவ்வாறு செயற்படுத்தினார்கள், நாடாளுமன்றத்துக்கு சட்டத்தரணிகளை அழைத்து வந்து எவ்வாறு செயற்பட்டார்கள் என்று நன்கு அறிவோம். ராஜபக்சர்கள் அன்று சட்டத்தை கையில் எடுத்து செயற்பட்டார்கள். இன்று சஜித் பிரேமதாசக்களின் சகாக்கவும் அவ்வாறே செயற்படுகிறார்கள். சுயாதீனமாக செயற்படும் நீதிபதிகளுக்கு அரசியல் முத்திரை குத்துவதற்கு முயற்சிக்கிறார்கள்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க மீது அரசியல் முத்திரை பதிக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கிறார்கள். சுயாதீனம் பற்றி பேசுபவர்கள் ரங்க திஸாநாக்கவை புத்தளத்துக்கு இடமாற்றம் செய்ததை மறந்துவிட்டார்கள். நீதிமன்றம் சுயாதீனமில்லை, அரசியல் நோக்கத்துடன் செயற்படுகிறது என்ற நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்.

நீதிச்சேவை ஆணைக்குழு சுயாதீனமானது. இந்த ஆணைக்குழுவுக்கு அரசுத்தலைவரால் கூட கட்டளை பிறப்பிக்க முடியாது. ஊழல்வாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தின் பிரகாரம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால் எதிர்க்கட்சியினர் அச்சமடைந்துள்ளார்கள். வேலிக்கு ஓணான் சாட்சி போல ஊழல்வாதிகளுக்கு எதிர்க்கட்சியினர் ஆதரவாகவுள்ளார்கள் என்றார்.

# தியாகி திலீபனுக்கு நேற்று சபையில் ரவிகரன் அஞ்சலி

தியாக தீபம் திலீபன் எந்த நோக்கத்திற்காக பசித்திருந்து தனது இன்னுயிரைத் தியாகித்தாரோ அந்த நோக்கமும், அவரின் எண்ணமும் இதுவரை நிறைவேறவில்லை. பார்த்தீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கின்றானென தமிழ் அரசுக் கட்சியின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கோப் அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் தியாகதீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தி உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழத் தமிழர்களின் உரிமைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை வழியில் உண்ணாவிரதமிருந்து உயிர்துறந்த தியாக தீபம் திலீபனுக்கு இந்த உயரிய சபையில் முதற்கண் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இராசையா பார்த்தீபன் என்னும் இயற்பெயரைக் கொண்ட தியாகச் செம்மல் திலீபன் தமிழர்களின் உரிமைக்காக தனது இன்னுயிரைத் துறந்து 38வருடங்கள் ஆகியுள்ளன.

ஆனாலும் ஈழத்தமிழர்கள் தற்போதும் உரிமைகள் மறுக்கப் பட்டநிலையிலே தமிழர் தாயகப் பரப்பில் வாழ்ந்துவருகின்றனர். தமிழர் தாயகப்பரப்பில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தற்போதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொடர்ந்தும் தமிழ் அரசியல்கைதிகள் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். தமிழர்தாயகப்பரப்பில் அதிகரித்த இராணுவமயமாக்கல் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டுவருகின்றன.

எனவே தியாகதீபம் திலீபன் எந்த நோக்கத்திற்காக பசித்திருந்து தனது இன்னுயிரைத் தியாகித்தாரோ அந்த நோக்கமும், அவரின் எண்ணமும் இதுவரை நிறைவேறவில்லை. அந்த வகையிலேயே பார்த்திபன் இப்போதும் பசியோடுதான் இருக்கின்றான் என்பதை இவ்வுயரியசபையிலே பதிவுசெய்துகொள்ள விரும்புகின்றேன் என்றார்.

# ரூபா 40 லட்சம் பெறுமதியான 'குஷ்' கட்டநாயக்காவில் நேற்று சிக்கியது

## சந்தேகநபர் ஒருவரும் கைது

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் 40 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதிமிக்க குஷ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வானூர்திநிலையத்திலிருந்துவெளியேறமுற்பட்ட நிலையில் அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வியாழக்கிழமை (25) இரவு பயணிகள் வருகை முனையத்தின் ஊடாக வானூர்தி நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்ட சந்தேகத்திற்கிடமான பயணியின் பயண பொதியிலிருந்து 418 கிராம் குஷ் போதைப்பொருள் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட குஷ் போதைப்பொருள் சுமார் 41 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்கது என சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் 48 வயதுடைய கொழும்பு இரத்மலானை பகுதியை சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தாய்லாந்தின் பாங்கொக் வானூர்திநிலையத்திலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் வானூர்தி சேவைக்கு சொந்தமான யு.எல் ஈ-405 என்ற வானூர்தித்தின் மூலம் வியாழக்கிழமை 6.30 மணியளவில் நாட்டை வந்தடைந்துள்ளார்.

போதைப்பொருள் குற்றச்சாட்டுத் தொடர்பில் ஏற்கனவே சந்தேகநபருக்கு எதிராக கல்கிஸ்ஸை மற்றும் கொழும்பு நீதிமன்றத்தில் 3 வழக்குநிலுவையில் உள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இதேவேளை கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் மற்றும் கைதான சந்தேகநபர் தொடர்பில் வானூர்தி நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

# உள்நாட்டு வானூர்தி சேவையின் பாதுகாப்புக்கு நடவடிக்கை தேவை

## எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

*வானூர்தி சேவையின் பாதுகாப்பு தன்மையில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் எமது நாடு உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. என்றாலும் உள்நாட்டு வானூர்தி பயணங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:*

*ஒரு நாடாக, நமது வானூர்திப் பயணப் போக்குவரத்துப் பாதுகாப்புகள் உயர் மட்டத்தில் காணப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். வானூர்திப் பாதுகாப்பு மதிப்பெண்ணில் எமது நாட்டிற்கான மதிப்பெண் 92வீதமாக அமைந்து காணப்படுகிறது., இது நமது நாட்டில் வானூர்திப் பயணப் போக்குவரத்து பாதுகாப்பைப் பொறுத்தவரை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இது உயர்மட்ட மதிப்பெண்ணாக அமைந்து காணப்படுகிறது.*

*இருப்பினும், ஒரு நாடாக, வானூர்திப் போக்குவரத்து பாதுகாப்பை மேலும் மேம்படுத்த நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் குறிப்பாக, உள்நாட்டு வானூர்திப் போக்குவரத்துப் பாதுகாப்பு தொடர்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் 2022ஆம் ஆண்டு ஹெகொப்டர் விபத்து ஒன்று இடம்பெற்றது. அதேபோன்று 2020,2021,2023 காலப்பகுதியிலும் உள்நாட்டு வானூர்தி பயணத்தின்போது விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.*

*அதனால் உள்நாட்டு வானூர்தி பயணப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக அவசர நிலைமைகளின்போது செயற்படக்கூடிய திடீர் விபத்து சேவை பிரிவுகளை பிரதேச செயலக மட்டத்தில் அமைக்கவேண்டும். அதேபா ன்று தேடிப்பார்த்தல் மற்றும் மீட்பு சேவை துறைகளை கிராம மட்டத்தில் ஆரம்பித்தல் போன்ற வேலைத்திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளும்தரப்பிடம் யோசனை முன்வைக்கிறேன் என்றார்.*


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2025இல் வெளியிடப்பெற்றது